**செய்தி வெளியீடு எண்: 441** **நாள்: 09.07.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (9.7.2018) தலைமைச் செயலகத்தில், அனைத்து வகையிலும் சிறப்பாகச் செயல்பட்ட 56 அரசு பள்ளிகளுக்கு ‘‘புதுமைப்பள்ளி’’ விருதுகளை வழங்கிடும் அடையாளமாக 5 பள்ளிகளுக்கு ‘‘புதுமைப்பள்ளி’’ விருதுகளையும், சிறந்த முறையில் மாணவர்களை பயிற்றுவித்த அரசு, ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் 140 ஆசிரியர்களுக்கு ‘‘கனவு ஆசிரியர்’’ விருதுகளை வழங்கிடும் அடையாளமாக 5 ஆசிரியர்களுக்கு ‘‘கனவு ஆசிரியர்’’ விருதுகளையும் வழங்கினார்கள்.

2017–18ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது, ‘‘மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக சிறப்பாகச் செயல்படும் பள்ளிகளைக் கண்டறிந்து, ஒரு மாவட்டத்துக்கு ஒரு தொடக்கப் பள்ளி, ஒரு நடுநிலைப் பள்ளி, ஒரு உயர்நிலைப் பள்ளி, ஒரு மேல்நிலைப் பள்ளி, என 4 பள்ளிகளுக்கு ‘‘புதுமைப்பள்ளி’’ என்ற விருதும், தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு தலா இரண்டு லட்சம் ரூபாயும் பரிசாக வழங்கப்படும் என்றும், அரசு, ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் பொருட்டு சிறந்த முறையில் கணினியை பயன்படுத்தி மாணவர்களுக்கு பயிற்றுவிக்கும் சிறந்த ஆசிரியர், கல்வி இணைச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் ஆசிரியர், குழந்தைகள் சேர்க்கை மற்றும் பள்ளி மேலாண்மையில் சிறந்து விளங்கும் ஆசிரியர், என ஒரு மாவட்டத்துக்கு 6 ஆசிரியர் வீதம் தேர்வு செய்து ஒவ்வொருவருக்கும் ‘‘கனவு ஆசிரியர் விருது’’ மற்றும் தலா 10,000/– ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்படும்’’ என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பிற்கேற்ப, அனைத்து வகையிலும் புதுமையான விதத்தில் சிறப்பாகச் செயல்பட்ட 16 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள், 16 நடுநிலைப் பள்ளிகள், 12 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 12 மேல்நிலைப் பள்ளிகள், என மொத்தம் 56 பள்ளிகள் ‘‘புதுமைப்பள்ளி’’ விருதுக்கு தெரிவு செய்யப்பட்டு, அப்பள்ளிகளுக்கு

‘‘புதுமைப்பள்ளி’’ விருதுகள் மற்றும் பரிசுத் தொகையாக 80 லட்சம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 5 பள்ளிகளுக்கு ‘‘புதுமைப்பள்ளி’’ விருதுகளையும் பரிசுத் தொகைக்கான காசோலைகளையும் வழங்கினார்கள்.

மேலும், சிறந்த முறையில் மாணவர்களை பயிற்றுவித்த அரசு, ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களில், 140 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு, 2017–18ஆம் ஆண்டுக்கான ‘‘கனவு ஆசிரியர்’’ விருதுகள் வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 5 ஆசிரியர்களுக்கு ‘‘கனவு ஆசிரியர்’’ விருதுகள் மற்றும் ஊக்கத் தொகையாக தலா 10,000 ரூபாய்க்கான காசோலைகளையும் வழங்கினார்கள்.

முன்னாள் சட்டத்துறை அமைச்சர் மறைந்த திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் சேகரித்து வைத்திருந்த 1500 புத்தகங்களை, தமிழ்நாடு நூலகத் துறைக்கு அன்பளிப்பாக வழங்குவதன் அடையாளமாக, திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்களின் குடும்பத்தினர் 5 புத்தகங்கள் அடங்கிய தொகுப்பினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் இன்று வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திருமதி பா.வளர்மதி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் முனைவர் வி.சி. இராமேஸ்வரமுருகன், தொடக்கக் கல்வி இயக்குநர் திரு.ஏ. கருப்பசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 9.7.2018**